திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் இருக்கின்ற அந்த நிலையூர் கண்மாயிலே வரும் தண்ணீர் திருமங்களம் தொகுதியிலே இருக்கின்ற உலகாணி கால்வாய் வழியாக அருப்புக்கோட்டை தொகுதிக்குச் செல்வது என்பது நல்ல திட்டம் தான். வருடம் எல்லாம் வறண்ட நிலையிலே இருப்பவர்களுக்கு அது ஒரு வரப் பிரசாதமாக இருக்கும். இப்போது வைகைக் கால்வாயை நவீனமாக்குகின்ற காரணத்தினால், தண்ணீர் எஞ்சி இருக்கின்றபோது, அந்தப் பகுதியிலே இருக்கின்ற பிற்பட்ட நிலைகளைக் கருத்தில் கொண்டு, அரசாங்கம் இதை விரைவிலே பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஏற்கெனவே, 1977–79-லே ஏற்பட்ட வெள்ள உடைப்புகளை சரி செய்வதற்கு 313 இலட்சம் நாம் மதிப்பீடு தயார் செய்யப்பட்ட பிறகு இது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அந்த வேலைகள் முடிந்த உடனே, இதை நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடனா நீர்த்தேக்கத்திலிருந்து மேல்மட்டக் கால்வாய் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 638—திரு. என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் கடனா நீர்த்தேக்க மேல் மட்ட கால்வாய் புதிதாக அமைக்க அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ): கைவசமுள்ள திட்டங்களின் ஆய்வுகள் முடிந்தவுடன், இத்திட்டம் முதல் நிலை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும் என தலைமை பொறியாளர் (ஆய்வு) தெரிவித்துள்ளார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிக்க அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலே, அடுத்த இந்தக் கைவசம் இருக்கின்ற திட்டங்களை எடுதது்க் கொண்டு நிறைவு பெறும், அப்படி பின்னாலே, அவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து எடுக்கப்படுகிற நேரத்திலே, இப்போது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றம் வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1982 மார்ச் 24]

ஏதாவது பூர்வாங்க ஆய்வை ஒரு முன்னுரிமையாக எடுத்து இருக்கிறீர்களா. அப்படி எடுத்திருந்தால், அதனுடைய விபரங்கள் என்ன என்பதை சபைக்கு அறிவிக்க முடியுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : திருநெல்வேலி மாவட்டத்தில் கடானா நீர்த்தேக்கத்தில் கிடைக்கும் உபரி நீரை அரசப்பட்டி வாய்க்காலில் இருந்து கடானா உயர்மட்ட கால்வாய் வழியாக விட்டு, அதன்மூலம், கடானா ஆற்றில் வடபகுதியில் உள்ள 11 மானாவாரி குளங்களை நிரப்புவதுதான் இதனுடைய நோக்கம். ஏற்கெனவே, ஒரு பிரிலிமினரி இன்வஸ்டிகேஷன் ஒரு தோராயமான முதல் நிலை ஆய்வு நடத்தப்பட்டு இருக்கிறது. அதன்படி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், 677 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். 65 ஏக்கர் நிலங்களில் பாசன வசதி பற்றாக்குறையைப் போக்கவும், 118 ஏக்கர் புதிய நிலங்களுக்கு பாசன வசதி பெறுவதற்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக இந்தக் கடையம் பஞ்சாயத்து ஒன்றியம்; தெற்கு மடத்தூர்; வடமலைப்பட்டி, வெங்காரம்பட்டி ஆகிய பகுதிகளிலே; இதிலே நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய அந்தத் தொகுதியைச் சார்ந்திருக்கக்கூடிய சில குளங்கள் அதிலே பயன்பெறுகின்றன. அதற்காகச் சொல்லவில்லையென்றாலும், பொதுவாகவே அதைத் தீவிரமாக ஆய்வு செய்ய வேண்டுமென்று இப்பொழுது அரசு கருதிக்கொண்டு இருக்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

காவிரி டெல்டாப் பகுதியை நவீனப்படுத்தும் திட்டம்.

*வினா எண். 639—திரு. எம். சின்னசாமி, திரு. கு. ரமணி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி நதியின் டெல்டா பகுதியை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதற்கான மதிப்பீடு எவ்வளவு ?

(இ) இந்திய அரசு இந்தப் பணிக்கு நிதி உதவி செய்கிறதா?